சிவகாசி

# அரசன் கணேசன் பாலிடெக்னிக்கில் செல்போன் சர்வீஸ் பயிற்சி




சிவகாசி, ஜுன். 21– சிவகாசி அரசன் கணேசன் பாலிடெக்னிக் கல்லூரியில் செல்போன் சர்வீஸ் பயிற்சி அளிக்கப் படுகிறது.

**செல்போன் சர்வீஸ்**

நேஷனல் ஸ்கில் டெவலப் மென்ட் கார்ப்பரேஷன் என்ற மத்திய அரசு நிறுவனம் ஸ்டார் என்ற திட்டத்தினை மாணவர்களுக்காக வெளியிட்டுள்ளது.

45 நாட்கள் கொண்ட இப்பயிற்சித்திட்டத்தின் நோக்கம் மாணவர்கள் தங் கள் திறமையை வளர்த்து கொள்ள ஊக்குவிப்பதாகும். இத்திட்டத்தின் பல தரப் பட்ட பயிற்சிகள் உள்ளன. அவற்றில் செல்போன் சர்வீஸ் பயிற்சியை சிவகாசி அரசன் கணேசன் பாலிடெக்னிக் கல்லூரி நிறுவனம் தங்களது மாணவர்களுக்கு சரியான முறையில்வழங்கிவருகிறது. அதன் அடிப்படையில் இக்கல்லூரியில் 75 மாணவர் கள் தேர்ச்சி பெற்று இப்பயிற்சிக்கான அரசு சான்றிதழையும் அதற்கான ஊக்கத் தொகையாக ரூ.2,500 பெற உள்ளனர். பயிற்ச்சிக்காக எவ்வித கட்டணமும் மாணவர்கள் செலுத்த தேவையில்லை என்பது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.

தற்போது செல்போன் இல்லாத வீடு இல்லை என்பது மாறி, செல்போன் இல்லாத நபரே இல்லை என்ற நிலை வந்து விட்டது. இந்தியாவில் 73 கோடி செல்போன் சந்தாதாரர் கள் இருப்பதாக புள்ளி விவரம் உள்ளது. இனிவரும் காலங்களில் இன்னும் அதிகமாக வாய்ப்புள்ளது என செல்போன் நிறுவனங்கள் தெரிவித்துள்ளது. செல் போன் ரூ. 2,000 முதல் ரூ.50,000 வரை உள்ளது. செல்போன் ரிப்பேர் ஆனால் அதை சரி செய் வதற்கு சரியான நபர் இல்லாததால் அதிக பணம் விரயம் ஆகிறது.

எனவே செல்போன் பயிற்சியின் அவசியத்தை உணர்ந்து அரசன் கணேசன் பயிலக மாணவர்களுக்கு சென்னையில் உள்ள 10 வருடம் அனுபவம் வாய்த்த புரவைடர்ஸ் ஸ்கில் அகாடமியின் இருந்து வல்லுநர்கள் வரவழைந்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இப்பயிற்சியின் மூலம் சுய தொழில் செய்து வாழ்க்கையில் முன்னேற லாம். செல்போன் நிறுவனங் களிலும் வேலை வாய்ப்பு பெறலாம்.

தற்போது மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறை மாணவர்களும், மின்னணுவியல் மற்றும் தொலை தொடர்பியல் துறை மாணவர்களும் மற்றும் இயந்திரவியல் துறை மாணவர்கள் 90 பேர் இப்பயிற்சியை பெற உள்ளனர். இப்பயிற்சியை தொடங்கி வைத்து செல் போன் சர்வீஸ் பயிற்சியின் சிறப்பு பற்றி கல்லூரி முதல்வர் நந்தகுமார் பேசி னார்.

இத்திட்டத்தினை விளக்கி புரைவைடர்ஸ் ஸ்கில் அகாடமியின் இயக்குநர் ஜெயஸ்ரீ பேசினார்.